**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள 13 விடுதிகளுக்கு ரூ.1,57,89,313 /– மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை**

அரசாணை (நிலை) எண்: 45

நாள் : 28.05.2019
விகாரி வருடம்
வைகாசித் திங்கள் 14–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். த3/14867/ 2018, நாள். 06.08.2018.

-----

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு கூட்டத்தில் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கும் விடுதிக் கட்டடங்களுக்கு உடனடியாக சுற்றுச் சுவர் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியதன் தொடர்ச்சியாக, வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள 13 விடுதிகளில் சுற்றுச் சுவர் இல்லாமல் இருப்பதாகவும் தெரிவித்து, ரூ.163.50 இலட்சம் மதிப்பீட்டில் அவ்விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு கோரி தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளுடன் கூடிய மதிப்பீட்டு அறிக்கைகளை ஆதி திராரவிடர் நல இயக்குநர் அரசுக்கு இணைத்தனுப்பியிருந்தார்.

2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள 13 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுவது தொடர்பாக தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ள மதிப்பீட்டறிக்கையில் உள்ள மொத்த மதிப்பீட்டில் சில செலவினங்களை குறைத்தும், கட்டுப்படுத்தியும், ரூ. 1,57,89,313/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து எண்பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று பதிமூன்று மட்டும்) மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்தும், நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசு ஆணையிடுகிறது:-

த.பி.பா.

| வ.எண். | விடுதியின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, குடியாத்தம், வேலூர் மாவட்டம். | 17.28 |
| 2. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, குருவராஜ் பேட்டை, வேலூர் மாவட்டம். | 11.80 |
| 3. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, பாணாவரம், வேலூர் மாவட்டம் | 17.68 |
| 4. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 20.77 |
| 5. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 10.88 |
| 6. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, மதிகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் | 13.84 |
| 7. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம் | 09.41 |
| 8. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, கொழப்புலூர், திருவண்ணாமலை மாவட்டம் | 11.14 |
| 9. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, வானாபுரம், திருவண்ணாமலை மாவட்டம் | 12.32 |
| 10. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம் | 11.34 |
| 11. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம் | 06.66 |
| 12. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, புதுப்பாளையம், திருவண்ணாமலை மாவட்டம் | 06.22 |
| 13. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, வேட்டவலம், திருவண்ணாமலை மாவட்டம் | 08.55 |
| | **மொத்தம்** | **157.89** |

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

த.பி.பா.

"4225 –ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள், JA – ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுதல்–416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்
(IFHRMS DPC 4225 01 277 JA 41601)
(Old DPC 4225 01 277 JA 1603)"

4. மேலே குறிப்பிட்டுள்ள பணிகள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கட்டுமானப் பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும், இத்தொகையினை பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

"K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00– உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் "
(த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)
(த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

6. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படியும், அதன்படி தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2019–2020–ஆம் நிதியாண்டில் அரசுக்கு அனுப்பிவைக்குமாறும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியை விரைவாக செயல்படுத்துதல் மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுத் துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வரவு–செலவு பொது-I)த் துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக்

த.பி.பா.

கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி(வரவு–செலவு பொது-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலன், சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2019–20 ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதி (ஆதி(ம)பந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர் ஆதிதிராவிடர் நலன், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.13239/ ஆதி(ம)பந/2019, நாள். 07.05.2019–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.100 (நூறு) .

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்:**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதி( ஆதி(ம)பந/ வரவு–செலவு பொது-I)த் துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5 ) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்